**தலைப்பு – 121 – பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

இவ்அறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

1 ஆவது பகுதி- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆவது பகுதி- ஒவ்வொரு தலைப்பிற்கும் உரிய விபரமான அறிக்கை

## I ஆவது பகுதி

**பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் சம்பந்தமான சுருக்கமான அறிக்கை**

---

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 253 | ஓய்வூதியத் திணைக்களம் |
| 254 | பதிவாளர் நாயகம் திணைக்களம் |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்குகள்

**(அ) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களுக்காக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடுகள் ரூபா 147,170,999,859 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் இதில் ரூபா 141,521,589,213 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சு மற்றும் ஒவ்வொரு திணைக்களத்தின் தேறிய ஏற்பாட்டில் சேமிப்பு ரூபா 18,365,728 இலிருந்து ரூபா 5,376,811,532 வரையான வீச்சில் அதாவது மொத்த தேறிய ஏற்பாட்டில் 2.15 சதவீதம் முதல் 22.47 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டன. விபரம் பின்வருமாறு.

| தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|---|
| | | தேறிய ஏற்பாடுகள் | பயன்பாடுகள் | சேமிப்புக்கள் | |
| | | ரூபா | ரூபா | ரூபா | |
| 121 | பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 1,131,627,586 | 877,394,200 | 254,233,386 | 22.47 |
| 253 | ஓய்வூதியத் திணைக்களம் | 145,185,872,807 | 139,809,061,275 | 5,376,811,532 | 03.70 |
| 254 | பதிவாளர் நாயகம் திணைக்களம் | 853,499,466 | 835,133,738 | 18,365,728 | 02.15 |
| | மொத்தம் | **147,170,999,859** | **141,521,589,213** | **5,649,410,646** | **03.84** |

## 2.2 வருமானக் கணக்குகள்

### மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களினால் 2013 ஆம் ஆண்டின் போது 05 வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 14,228 மில்லியன் தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் வருமானமாக ரூபா 16,500 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் படி மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 92.67 சதவீதம் முதல் 4,909.68 சதவீதம் வரையிலான வீச்சில் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறு.

| வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் | வருமானக் குறியீடு | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமான மிகை/ (பற்றாக்குறை) | மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக மிகை/ (பற்றாக்குறை) |
|---|---|---|---|---|---|
| -------------- | ------------- | ------------- | ------------- | ------------- | ------------- |
| | | ரூபா | ரூபா | ரூபா | |
| செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 10:03:07:99 | 133,389,000 | 141,789,131 | 8,400,131 | 106.29 |
| பணிப்பாளர் நாயகம், ஓய்வூதியத் திணைக்களம் | 20:04:01:00 | 8,528,000,000 | 8,866,646,032 | 338,646,032 | 103.97 |
| பணிப்பாளர் நாயகம், ஓய்வூதியத் திணைக்களம் | 20:04:02:00 | 4,340,000,000 | 6,278,095,915 | 1,938,095,915 | 144.66 |
| பதிவாளர் நாயகம், பதிவாளர் நாயகம் திணைக்களம் | 10:03:02:00 | 1,600,000 | 78,555,000 | 76,955,000 | 4909.68 |
| பதிவாளர் நாயகம், பதிவாளர் நாயகம் திணைக்களம் | 10:03:07:02 | 1,225,000,000 | 1,135,204,321 | (89,795,679) | (92.67) |
| | | ------------------ | ------------------- | ------------------ | |
| மொத்தம் | | **14,227,989,000** | **16,500,290,399** | **2,272,301,399** | **15.97** |
| | | ========== | ========== | ========= | |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானவை | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 12101 | 29,000,000 | 24,070,567 | 14,000,000 | 16,646,031 | 100,000,000 | 73,464,595 |
| 25301 | 30,000,000 | 29,995,206 | 16,000,000 | 19,377,089 | 12,000,000 | 91,983,347 |
| 25401 | 64,000,000 | 50,512,239 | 35,000,000 | 39,044,401 | 200,000,000 | 153,830,841 |

## 2.4 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### 2.4.1 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்குகளில் ரூபா 535,683 தொகையான வரவு மீதி காணப்பட்டது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

**பொது வைப்புக் கணக்கு**

| அமைச்சு / திணைக்களம் | 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வரவு மீதி |
|---|---|
| | ரூபா. |
| பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 534,975 |
| ஓய்வூதியத் திணைக்களம் | 708 |
| மொத்தம் | **535,683** |

## 2.4.2 பொது வைப்புக் கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களின் பொது வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 13,741,648 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அது தொடர்பான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| அமைச்சு/ திணைக்களம் | கணக்கு இலக்கம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | **ரூபா** |
| பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 6000/0000/00/0015/0034/000 | 4,165,455 |
| ஓய்வூதியத் திணைக்களம் | 6000/0000/00/0015/0133/000 | 9,464,427 |
| பதிவாளர் நாயகம் திணைக்களம் | 6000/0000/00/0015/0134/000 | 111,766 |
| **மொத்தம்** | | **13,741,648** |

## 2 ஆவது பகுதி

--------------------

**ஒவ்வொரு தலைப்பிற்கும் உரிய விபரமான அறிக்கை**

---

## 1. தலைப்பு 121 – பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு

---

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 04 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கூற்று மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக

சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும், வருமானக் கணக்கும், இணக்கக் கூற்றும் இங்கே (அ) தொடக்கம் (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.4 தொடக்கம் 1.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 07 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 47,440,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) 06 செலவின விடயங்களுக்காக மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 12 சதவீதத்திற்கும் 98 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(iii) 15 செலவின விடயங்களுக்காக ரூபா 890,793 பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) கட்டுநிதிக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாக பெறப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 24 சந்தர்ப்பங்களின் போது உரிய

செயற்பாடுகள் முடிவடைந்து 31 நாட்கள் முதல் 107 நாட்கள் வரையிலான கால தாமதத்தின் பின்னர் உபகட்டுநிதி தீர்க்கப்பட்டிருந்தது.

(ii) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் ஒரு பதவிநிலை உத்தியோகத்தருக்கு ஒரு தடவையில் வழங்க முடியுமான ஆகக்கூடிய செயல்நிமித்த உப கட்டுநிதி ரூபா 20,000 ஆக இருந்த போதிலும், அந்த பிரமாணங்களுக்கு முரணாக 04 நாட்களில் 08 சந்தர்ப்பங்களின் போது இரண்டு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 20,000 இனை விஞ்சி ரூபா 138,800 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உபகட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(iii) 06 சந்ர்ப்பங்களின் போது ரூபா 78,271 தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி பெறப்பட்டு 07 நாட்கள் முதல் 31 நாட்கள் வரையிலான காலப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டதன் பின்னர் மொத்த கட்டுநிதியும் காசாகத் தீர்க்கப்பட்டிருந்தது. இதனால் அரசாங்கத்தின் பணம் தற்காலிகமாக மோசடி செய்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(iv) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் செயல்நிமித்த உப கட்டுநிதி பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக இரண்டு சந்தர்ப்பங்களின் போது ரூபா 210,000 கூட்டுத்தொகையானது அமைச்சிற்கு வெளியிலுள்ள நபர்களுக்கு வழங்கப்பட்டு 12 நாட்கள் மற்றும் 57 நாட்கள் அரசாங்கத்தின் பணம் அந்த நபர்களின் பொறுப்பில் வைத்திருப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

**(இ) வருமானக் கணக்கு**

-----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சினால் 2013 ஆம் ஆண்டிற்காக 10.03.07.99 ஆம் இலக்க வருமானக் குறியீட்டிற்காக ரூபா 133.4 மில்லியன்

கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 141.8 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதாவது திருத்திய மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 106.3 சதவீதத்தில் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ii) அந்த வருமானக் குறியீட்டிற்குரிய திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் 2012 ஆம் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 17,169,593 ஆக இருந்ததுடன் 2013 ஆம் ஆண்டிற்காக ரூபா 10,000,000 ஆன வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. பின்னர் அது ரூபா 20,000,000 வரை திருத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியின் போது ரூபா 25,585,890 வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது சேகரிக்க முடியுமான வருமானத்தை சரியாக எதிர்வு கூறுவதற்கு தவறியிருந்தது.

(iii) 1997 சனவரி 13 ஆந் திகதிய 97/02 ஆம் இலக்க பிரதேச நிருவாகச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் இயலுமான சகல சந்தர்ப்பங்களிலும் வருடாந்த வருமானச் சான்றிதழ் மாத்திரம் வழங்குதல் உகந்ததாக இருந்தமை குறிப்பிட்டிருக்கும் போது அதனைக் கருத்தில்கொள்ளாது திருகோணமலை, பொலன்னறுவை மற்றும் வவுனியா மாவட்ட செயலகங்களினால் மாதாந்த வருமான சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது.

(iv) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது 07 மாவட்டங்களினால் உழைக்கப்பட்ட வருமானம் குறைவடைந்திருந்ததுடன் அதில் அம்பாறை, மட்டக்களப்பு, நுவரெலியா மற்றும் புத்தளம் போன்ற மாவட்டங்களின் வருமானம் குறைவடைதல் முறையே 38 சதவீதம், 29 சதவீதம், 16 சதவீதம் மற்றும் 11 சதவீதம் ஆக இருந்தன.

**(ஈ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணைக்கக்கூற்றுக்கள்**

---

விடய இல. 12101 இன் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணைக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 580,298 ஆக இருந்ததுடன் அந்நிலுவை மீதியினை அறவீடுசெய்வதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**1.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

(அ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்

---

நிதி அமைச்சிற்கு உரித்து கையளிக்கப்பட்ட நிசான் சனி வகையான மோட்டார் வாகனம் ரூபா 275,000 பெறுமதியில் 2003 மே 28 ஆந் திகதி பதுளை மாவட்ட செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு 2011 யூலை 21 ஆந் திகதி பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு பயன்படுத்துவதற்காக கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரையிலும் அதன் உரித்து அமைச்சிற்குக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 33,196,700 ஆக இருந்ததுடன் அந்த மீதி ஒரு வருடத்திற்குக் குறைவான காலத்திற்குதரியதாகும்.

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட மீதிக்கு மேலதிகமாக ஆண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு வெளி ஒப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டிய பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 2,589,489 ஆக இருந்தது.

## 1.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| | நிதிப் பிரமாணம் 1645(அ) | பொது 267 படிவத்தின் பிரகாரம் பேணப்பட வேண்டிய வாகன சம்பவக் குறிப்புப் புத்தகம் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை | |
| | 2010 மே 14 ஆந் திகதிய CA/1/171 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 மற்றும் 3.2 ஆம் பந்திகள் | அமைச்சரரொருவருக்கு ஆகக் கூடியது 03 உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் கௌரவ அமைச்சரின் பாவனைக்காக 05 வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை மிகைத்து வாகனங்களை வழங்கியமை தொடர்பாக நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) பொது நிருவாகச் சுற்றறிக்கை

-------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) | 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 02 மற்றும் 03 ஆம் பந்திகள் | 03 குழாம் வாகனங்களுக்காக அரச இலட்சனை மற்றும் அமைச்சின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கவில்லை |
| (ii) | 2012 யூன் 25 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க ஒன்றிணைந்த சேவைகள் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி மற்றும் வருடாந்த இடமாற்ற நடைமுறைகளின் 3.1 ஆம் பந்தி | 02 வருடங்களுக்குக் குறைவான காலம் அளவில் அமைச்சில் சேவையாற்றிய 14 சாரதிகளுக்கு அமைச்சினால் இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது. |

## 1.6 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் நலிவுகள்

-----------------------------------------------------------------------------------

செயற்திட்டங்களை அமுல்படுத்துவதிலுள்ள தாமதம் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) 2006 ஆம் ஆண்டின் போது 1,452 வீடுகளைக் கொண்ட வீடமைப்புத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக கெப்பட்டிபொல மாவத்தை - உத்தேச வீடமைப்புத் தொகுதி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2010 மற்றும் 2011 ஆகிய இரண்டு வருடங்களில் நகர அபிவிருத்தி அதிகாரசபை, மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் மற்றும் கட்டிடத் திணைக்களம் போன்ற நிறுவனங்களுக்கு ரூபா 5,019,262 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) கண்டி குண்டசாலையில் 696 வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 2,728,828,261 தொகையான மதிப்பிடப்பட்ட கிரயத்துடன் 2010 ஆகஸ்ட் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2014 நவம்பர் 27 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) காலி ஹபராதுவையில் 576 வீடுகள் மற்றும் வெகுனகொடையில் 512 வீடுகள் உள்ளடங்கலாக 1,088 மொத்த வீடுகளை நிர்மாணிப்பதற்காக 2003 ஆம் அண்டின் போது அமைச்சு மேலும் இரண்டு அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களுடன் முத்தரப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் இந்த விடமைப்பு செயற்திட்டம் 2010 ஏப்ரல் மாதத்தின் போது பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும், ஹபராதுவ வீடமைப்புத் திட்டத்திற்காக ஹபராதுவ பிரதேச சபையிலிருந்து பெறவேண்டிய இணக்கச் சான்றிதழ் (COC சான்றிதழ்) 2014 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட இரண்டு செயற்திட்டங்களிலும் எந்தவொரு வீடும் நலனாளிகளுக்கு விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) 16 பதவிநிலை உத்தியோகத்தர் வீடுகள் மற்றும் தனியாள் குடியிருப்பதற்காக 48 அறைகளையுடைய 09 மாடிகளைக் கொண்ட கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 114,300,000 தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்துடன் கொழும்பு கோத்தமி வீதியில் வீடமைப்பு செயற்திட்டம் 2001 ஒக்தோபர் மாதத்தில் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அக்கட்டிடத்தின் நிர்மாணம் 2014 நவம்பர் மாதம் வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.7 செயலாற்றல்**

2013 ஆம் ஆண்டில் அமைச்சின் செயலாற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

## (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்

அமைச்சினால் பிரதான செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்த சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| பிரிவு | துறைகள் | செயற்பாடுகள் | பூர்த்திசெய்யப்பட்ட சதவீதம் |
|---|---|---|---|
| உள்ளகக் கட்டுப்பாட்டுப் பிரிவு | மின் விசிறியொன்றைப் பொருத்துதல் | கேள்வி ஆவணங்களை அங்கீகரித்தல் | இல்லை |
| | வெற்றிடங்களை கண்டறிதலும் அவற்றை நிரப்புதலும் | வெற்றிடங்களை நிரப்புதல் | இல்லை |
| நிதிப் பிரிவு | நிருவாக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் | 02 புதிய மின் விசிறிகளைப் பொருத்துதல், 4 ஆவது மாடியில் இடவசதி ஏற்படக்கூடிய வகையில் அபிவிருத்தி செய்தல் | இல்லை |
| பொறியியல் பிரிவு | போட்டி மற்றும் வெளிப்படையான ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரிக்கும் நோக்கத்துடன், திறன் ஒழுங்குமுறையின் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்களுக்காக பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் அதன் பிரகாரம் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளல் | வெற்றிடங்கள் காணப்படுகின்ற நிறுவனங்களுக்கு உத்தியோகத்தர்களை இணைத்தல் | இல்லை |
| அபிவிருத்தி, ஆராய்ச்சி மற்றும் பராமரித்தல் பிரிவு | தொகுதி வீடுகளுக்குரிய பழுதுபார்த்தல் | பழுதுபார்த்தல் மேற்கொண்ட வீடுகள் மற்றும் அதற்காக செலவிடப்பட்ட நிதி ஏற்பாடு தொடர்பாக தரவு முறைமையொன்றைப் பேணுதல் | 31 |

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாட்டலுவல்கள் பிரிவு | (i) | பன்முகப்படுத்தப்பட்ட நிருவாகத்திற்கான பயிற்சி உபாயமொன்றை அறிமுகப்படுத்துதல் | மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் பயிற்சி வசதிகளை அபிவிருத்தி செய்தல் | 20 |
| | | | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் பயிற்சிப் பிரிவை வலுப்படுத்துதல். | 0 |
| | (ii) | அலுவலகங்களுக்கு வருகின்ற பொதுமக்களுக்கு உரிய சேவை வசதிகளை நிறைவேற்றுதல் | அலுவலகத்திற்காக உரிய சேவை வசதிகளை இனங்காணுதல் | 20 |
| | (iii) | தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மாவட்ட நிருவாகம், பிரதேச நிருவாகம் நிறுவன முறைமையை இணையதளப்படுத்தல் | தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை இனங்காணலும் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தலும் | 20 |
| | (iv) | பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம உத்தியோத்தர் அலுவலகங்களில் முகாமைத்துவ போட்டி | முகாமைத்துவ போட்டியில் பரிசுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் | 0 |

| | | | |
|---|---|---|---|
| தகவல் தொழில்நுட்பப் பிரிவு | தகவல் தொழில்நுட்பம் வழங்குகின்ற சேவையின் அளவு | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இணையதளத்தில் சுற்றுலா விடுதிகள் மற்றும் விடுமுறை விடுதிகளை ஒதுக்கிக் கொள்வதற்கான முறைமையொன்றைத் தயாரித்தல் | 10 |

## 1.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------

அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டி செயல் நடைமுறைகளுக்குப் புறம்பானவைகள்

-----------------------------------------------------------------------------------------------------------------------------

அமைச்சின் கேட்போர் கூடத்திற்கு வெளியே மலசலகூடம் மற்றும் ஏனைய பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை நிறைவேற்றும் ஒப்பந்தத்தின் அளவிடைப்பட்டியலில் குறிப்பிடப்பட்ட ரூபா 505,880 பெறுமதியான 10 வகையான விடயங்களுக்குப் பதிலாக அதனை விட தரத்தில் குறைந்த விடயங்கள் பொருத்தப்பட்டிருந்தன.

## 1.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

--------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட மாதிரிகளுக்குப் புறம்பாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

தூர இடங்களிலிருந்து அரச கடமைகளுக்காக வருகை தருகின்ற அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு புகையிரத நிலையம் வரை போக்குவரத்து வசதிகளை வழங்கும் அடிப்படை நோக்கத்தில் 2013 யூலை 29 ஆந் திகதி அமைச்சினால் ரூபா 5.5 மில்லியனுக்கு பஸ் வண்டியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த பஸ் வண்டி கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் வருடமொன்று கடப்பதற்குள் அடிக்கடி கியர் முறைமை மற்றும் கிளேச் முறைமை செயலிழந்தமையினால் பழுதுபார்த்தல் மேற்கொள்ள வேண்டியேற்பட்டமையினால் கவனத்தில் கொள்ளக்கூடிய காலமொன்று பஸ் வண்டி ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது. பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகளுக்கு மேலதிகமாக 2014 நவம்பர் 10 ஆந் திகதியளவில் மீண்டும் வாகனம் பழுதுபார்த்தலுக்காக கராஜிற்குக்

கையளிக்கப்பட்டிருந்ததுடன் வண்டியின் கூரை முழுமையாக பழுதுபார்க்கப்பட வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அடிக்கடி பழுதுபார்த்தலுக்காக பஸ்வண்டி ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாமையினால் பஸ் வண்டியைக் கொள்வனவு செய்தலின் நோக்கத்தை நிறைவேற்ற முடியாதிருந்தது.

## 1.10 முகாமைத்துவ நலிவுகள்

----------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அமைச்சிற்குச் சொந்தமான மிட்சுபிசி ஜீப் வண்டி ரூபா 900,000 இற்கு விலை மதிக்கப்பட்டு அதற்காக முறையே ரூபா 1,467,386 ஆகக்கூடிய விலை மற்றும் ரூபா 1,267,500 தொகையான இரண்டாவது ஆகக்கூடிய விலையுடன் இரண்டு கேள்விதாரர்களினால் கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், வாகனத்தின் ஆரம்ப பதிவு உறுதிப்படுத்தப்படாமை, வாகனம் பழைமையடைந்தமை மற்றும் சிதைவடைந்த நிலையில் காணப்பட்டமையின் காரணத்தினால் கேள்விதாரரினால் வாகனத்தைக் கொள்வனவு செய்தல் நிராகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மிட்சுபிசி பஜிரோ வண்டி அமைச்சின் வாகன ஏல விற்பனைக்கோ அல்லது ஏனைய முறையிலோ அகற்றப்படாமல் ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோத்தருக்கு கையளிப்பதற்காக 03 வருட கால அளவில் பாவனையில் ஈடுபடுத்தப்படாது அமைச்சின் வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) பல்வேறு தரப்பினர்களிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய மீதிகளின் பெறுமதி ரூபா 48,226,989 ஆக இருந்ததுடன் அந்த மீதிகளில் ரூபா 21,335,170 கூட்டுத் தொகையானது 05 வருடங்களுக்கு குறைவான காலமாகவும், ரூபா 26,891,819 கூட்டுத்தொகையான மீதிகள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் முன்கொண்டுவரப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேலே காணப்படுகின்ற மீதிகளுக்குரிய ரூபா 40,872,000 தொகையான நிலுவை வீட்டு வாடகைப் பெறுமதி காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிலிருந்து அறவிடவேண்டியிருந்தது.

(ii) 15 குடியிருப்பாளர்களிடமிருந்து நிலுவை வீட்டு வாடகையாக ரூபா 6,326,890 கூட்டுத்தொகையானது நீண்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டது.

(iii) ஒரு உத்தியோகத்தரிடமிருந்து 2006 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து அறவிடவேண்டியிருந்த ரூபா 343,928 தொகையான மீதியொன்று அவர் வெளிநாடு சென்றமையினால் அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

(ஈ) அமைச்சிற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகள் அரசாங்க கணக்குக் குழுவினால் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட விடயங்கள் தொடர்பாக 2010 ஒக்தோபர் 19 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் குழுவின் சிபாரிசுகளை அதிகாரிகளினால் அமுல்படுத்தும் போது மெதுவான போக்கினைக் காண்பித்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | தொடர்புடைய விடயம் | குழுவின் சிபாரிசு | செயலாளரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மாளிகாவத்தை செயலகச் சுற்றாடலில் கட்டிடங்களிலிருந்து ரூபா 246 மில்லியன் வீட்டு வாடகை அறவிடப்படாமை. | உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான வாடகையை விரைவாக அறவிட்டுக் கொள்வதற்கும் பராமரிப்பிற்காகவும் அந்த நிறுவனத்திற்கே கட்டிடத்தை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | 2013 திசெம்பர் மாதம் வரையிலும் காணப்பட்ட நிலுவை வாடகை ரூபா 246.6 மில்லியனாக இருந்ததுடன் 2014 நவம்பர் 26 ஆந் திகதி வரையிலும் அதில் ரூபா 167 மில்லியன் அமைச்சுச் செயலாளரினால் தீர்க்கப்பட்டிருந்தது. |
| (ii) | அக்ரஹார காப்புறுதித் திட்டத்தை திருத்துவதன் கீழ் கடன் சேமிப்பு காப்புறுதிப் பூட்கைகளை | கடனைச் செலுத்தாதுள்ள உத்தியோகத்தர்களுக்குரிய கடன் பணத்தை அக்ரஹார காப்புறுதி | அக்ரஹார காப்புறுதிக்காக பிணையாக வைக்கப்பட்ட கடன் பணம், உத்தியோகத்தரொருவர் |

| | | |
| --- | --- | --- |
| பிணையாக வைத்து கடன் பெற்ற உத்தியோகத்த ரொருவருக்கு சேவையிலிருந்து விலகிச் செல்லும் போது அல்லது சேவையிலிருந்து விலக்குகின்ற போது காப்புறுதிப் பூட்கையின் கீழ் காப்புறுதிப் மேவுகை பெற்றுக்கொள்ள முடியாமை | நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு உரிய தரப்பினருடன் கலந்துரையாடுமாறு வழங்கப்பட்ட கட்டளை | சேவையை விட்டுச் செல்லும்போது அல்லது சேவையிலிருந்து நீக்கப்படும் போது அக்ரஹார காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக இது வரையில் சுற்றறிக்கையொன்றை விநியோகிப்பதற்கான வரைவு காணப்பட்டது. |

## 1.11 மனிதவள முகாமைத்துவம்

---------------------------------------------

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

-----------------------------------------------------------------------------------------------------------------

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
| --- | --- | --- | --- | --- | --- |
| (i) | சிரேஷ்ட நிலை | 74 | 63 | 12 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 18 | 14 | 04 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 493 | 396 | 171 | 74 |
| (iv) | ஆரம்ப நிலை | 216 | 171 | 45 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 01 | 01 | - | - |
| | மொத்தம் | 802 | 645 | 232 | 75 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காளர் சேவையில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 03 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 04 ஆக இருந்தது. அவ்வாறே அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 25 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 99 ஆக இருந்தது. மிகையான பதவிகளுக்காக உரிய அதிகாரிகளின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. தலைப்பு 253 – ஓய்வூதியத் திணைக்களம்

---

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

ஓய்வூதியத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 29 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

## 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கூற்று மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் ஓய்வூதியத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும், இணக்கக் கூற்றும் இங்கே (அ) முதல் (ஊ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 2.4 முதல் 2.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பராமரிக்காமை

திணைக்களத்தால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

| | |
|---|---|
| கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஓய்வூதிய கொடுப்பனவின் முறையற்ற தன்மை தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடொன்றை பரீட்சிப்பதற்காக கடுவெல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் தபால் அலுவலகத்தின் மூலம் ஓய்வூதியம் செலுத்தப்பட்டு மீண்டும் பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவுப் பட்டியலை சமர்ப்பிக்குமாறு கோரி இருந்த போதிலும் அவைகள் அழிவடைந்ததாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ii) இரண்டாம் நிலை அடிப்படையில் விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் விதவைகள், அநாதைகள் பங்களிப்புப் பணம் விதவைகள் அனாதைகள் நிதிய அலுவலகத்திற்கு கிடைக்கப் பெறுவதை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் காணப்படவில்லை.

**(இ) பாதீட்டு முரண்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,800,000 தொகையான மொத்தத் தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 07 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின

விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 50 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(iii) ஓய்வூதிய நலன் செலவின விடயத்திற்காக (253-1-2-1502) ரூபா 77 மில்லியன் நிதியேற்பாடு பெறப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 22.5 மில்லியன் தொகை ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டதன் பின்னரும் ஆண்டின் இறுதியில் ரூபா 7.2 மில்லியன் சேமிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

(iv) மீளாய்வாண்டின் போது பணிக்கொடைக் கொடுப்பனவு செலவின விடயத்திற்காக (253-1-2-1502(ii)) வழங்கப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 6.2 மில்லியன் கட்டிடங்கள் மற்றும் நிர்மாண செலவின விடயங்களுக்காகவும் மேலும் ரூபா 1,825 மில்லியன் தொகை நலன்புரி செலவின விடயங்களுக்காகவும் நி.பி 66 இன் மூலம் மாற்றப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த ஓய்வூதியப் பணிக்கொடை விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 13,140 ஆக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு செலுத்தவேண்டிய ஓய்வூதியப் பணிக்கொடை பணம் ரூபா 7,093.9 மில்லியனாக இருந்தது. பணிக்கொடை வழங்குவதற்காக ஓய்வூதியக்காரர்களின் பாரியளவான எண்ணிக்கையொன்று காத்திருக்கும் பதிவேட்டில் இருக்கும் போது அந்தக் கொடுப்பனவுகளுக்காக வழங்கப்பட்ட நிதியேற்பாடு ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றுதல் தொடர்பான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2012 இன் ஒதுக்கீட்டுக் கணக்கில் ‘‘டீ.ஜீ.எஸ்.ஏ’’ படிவத்தில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஓய்வூதிய மேலதிகக் கொடுப்பனவாக ரூபா 111,743,343 தொகை குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 2013 இன் ஒதுக்கீட்டுக் கணக்கில் ‘‘டீ.ஜீ.எஸ்.ஏ’’ படிவத்தில் 2013 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு அந்த மீதி ரூபா 271,673,586 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் படி ரூபா 159,930,243 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இந்த வேறுபாட்டிற்கான காரணம் விளக்கப்பட்டிராததுடன் மேலதிகமாகச்

செலுத்தப்பட்டதாக வெளிப்படுத்தப்பட்ட ஓய்வூதியத்தை மீள அறிவிடுதல் மேற்கொள்ளும் போது திணைக்களத்தினால் பதிவேடுகள் பேணப்பட்டிருந்த போதிலும் அவை நாளதுவரையாக்கப்படாதிருந்தமையினால் அது தொடர்பாக கணக்காய்வின்போது விடயங்களை வெளிப்படுத்துவதற்கு சிரமமாக இருந்தது.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2013 திசெம்பர் 31 ஆந் திகதயில் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 9,464,427 ஆக இருந்ததுடன் ரம்பொட விடுமுறை விடுதியை நிர்மாணிப்பதற்காக ஓய்வூதியம் பெறுவோரின் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்ட தொகையிலிருந்து எஞ்சியிருந்த ரூபா 491,870 தொகையினை ஓய்வூதியம் பெறுவோருக்கு செலுத்துவதற்கு அல்லது வேறு ஏதும் மேற்கொள்ளப்படாது 3 வருடங்களுக்கும் 4 வருடங்களுக்கும் இடையிலான காலம் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**(உ) வருமானக் கணக்குகள்**

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருமானக் குறியீட்டு இலக்கம் 20:04:02:00 - சமூகப் பாதுகாப்பு பங்களிப்புப் பணம் (மாகாண சபை)

-------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ❖ வருடாந்த பாதீட்டுக் கூற்றின் படி மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 4,340,000,000 ஆக இருந்ததுடன் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 6,278,095,915 தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும் மதிப்பிடப்பட்ட வருமானத்தை திருத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- சமர்ப்பிக்கப்பட்ட கணக்கின் பிரகாரம் ரூபா 659,604,716 கூட்டுத்தொகையான வருமானம் 1 வருடம் முதல் 2 வருடங்களுக்கு இடையிலான கால வீச்சில் நிலுவையாக இருந்தது. அந்த நிலுவையாக இருந்த வருமானத்தை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

- நிதிப் பிரமாணம் 128(2)(இ) இன் படி வருமானக் குறிப்பீட்டிற்குரிய அரையாண்டு ரீதியான நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

- நிதிப்பிரமாணம் 128(2)(எ) மற்றும் 2002 யூலை 17 ஆந் திகதிய 1/2002 ஆம் இலக்க அரசாங்க பொது நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார செயற்பாட்டுச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி பங்களிப்புப் பணப் பெறுவனவுகள் பகுப்பாய்வு செய்யக்கூடிய வகையில் ஒவ்வொரு நிறுவனத்திலிருந்தும் மாதாந்தம் கிடைக்கின்ற பங்களிப்புப் பணம் தொடர்பான அறிக்கை பேணப்படாதிருந்தமையினால் ரூபா 591,296,880 தொகையான நிலுவையான வருமானத்தின் சரியான தன்மையினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது. அவ்வாறே போதியளவான தகவல்கள் இல்லாமையினால் நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிடுவதற்குத் தேவையான ஏற்பாடுகளை தயாரிப்பதற்கு திணைக்களம் முடியாதிருந்தது.

- மீளாய்வாண்டின் போது மாகாண சபையிலிருந்து சமூக பாதுகாப்பு பங்களிப்புப் பணமாக ரூபா 6,278,095,915 தொகை கிடைத்திருந்தது. அந்த பெறுவனவுகள் முன்னைய மாதத்துடன் மாதாந்தம் பகுப்பாய்வு செய்யும் போது சில மாதங்களில் முன்னைய மாதத்தை விட குறைவு ரூபா 226,916,925 முதல் அதிகரிப்பு ரூபா 217,194,597 வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. அந்த முரண்களுக்குரிய காரண விடயங்கள் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

- தவறொன்றினால் குறிப்பிடப்பட்ட பணத்திற்கு மேலதிகமாக திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்ட சமூகப் பாதுகாப்புப் பணத்தை மீளச் செலுத்துவதற்காக நிதிப் பிரமாணம் 118(2)(அ) இன் பிரகாரம் அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாது மீளாய்வாண்டின் போது ரூபா 3,098,275 தொகையான சமூகப் பாதுகாப்பு பங்களிப்புப் பண வருமானத்தின் மீளச் செலுத்துகை விதவைகள், அநாதைகள் அலுவலகத்தின் பணிப்பாளரினதும் கணக்காளரினதும் அங்கீகாரம் மற்றும் உறுதிப்படுத்தல்களுடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே மீளச் செலுத்துகைகள் பெறப்பட்டமை உரிய தரப்பினரிடமிருந்து உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- மீளாய்வாண்டின் போது வருமானமாகக் கிடைத்திருந்த பல்வேறு குறைபாடுகளின் காரணமாக கணக்கு வைக்கப்படாமல் உரிய நிறுவனத்திற்கு மீளத் திருப்பி அனுப்பப்பட்ட ரூபா 602,931 கூட்டுப்பெறுமதியான 22 காசோலைகளுக்காக மீளப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது மீளாய்வாண்டின் போது நிலுவை வருமானமாக கணக்கீடு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிதிப்பிரமாணம் 165(2)(அ) இன் ஏற்பாடுகளின் படி பதவிநிலை உத்தியோகத்தரொருவரின் மேற்பார்வையின் கீழ் அச்செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- இரண்டாம் நிலை அடிப்படையில் விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தரின் பங்களிப்புப் பணப் பெறுவனவு தொடர்பான எந்தப் பதிவேடும் விதவைகள் அனாதைகள் அலுவலகத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. நிலுவை பங்களிப்புப் பணத்தை உரிய நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கும் வருமானக் கணக்குகளில் நிலுவைப் பங்களிப்புப் பணத்தைப் பதிவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வருமானக் குறியீட்டு இலக்கம் 20:04:01:00 (மத்திய அரசாங்கம்) சமூகப் பாதுகாப்பு பங்களிப்புப் பணம்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ❖ 2013 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 8,528,000,000 ஆக இருந்ததுடன் ஆண்டின் இறுதிவரையில் ரூபா 8,866,646,032 தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. மதிப்பிடப்பட்ட வருமானத்தை விஞ்சி வருமனம் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும், ஆரம்ப மதிப்பீட்டைத் திருத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- ❖ மீளாய்வாண்டின் யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறும் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறும் நிலுவை வருமானம் தொடர்பாக ‘‘வெற்று அறிக்கை’’ சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 5,185,435 தொகையான நிலுவை வருமானம் காணப்பட்டமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

- ❖ ஒழுங்கு முறையான பதிவேடு பேணப்படாமையினால் ஏதாவது குறிப்பிட்ட திகதியில் காணப்படுகின்ற நிலுவை வருமானம் உரித்தான நிறுவனம் மற்றும் காலப்பகுதி தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

- ❖ 2001 சனவரி 15 ஆந் திகதிய 1/2001 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் படி ஒவ்வொரு மாதமும் கணக்குப் பொழிப்புக்களின் மூலம் வரவு மற்றும் செலவு வைக்கப்பட்ட நிதி தொடர்பான அறிக்கை அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் அநேகமான நிறுவனங்கள் அந்த ஏற்பாடுகளின் படி அறிக்கை சமர்ப்பிக்காதிருந்ததுடன் அந்த அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கும்

திணைக்களத்தினால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

❖ மீளாய்வாண்டின் போது வருமானத்தில் மீளச் செலுத்தப்பட்ட ரூபா 7,445,323 தொகையாக இருந்ததுடன் அதில் ரூபா 1,441,262 தொகையான கொடுப்பனவுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கீழே காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் உரிய நிறுவனங்களிலிருந்து வரவுக் கட்டளை பெற்றுக்கொள்வதற்கு போதியளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2011 ஆம் ஆண்டின் போது வருமானத்தில் மீளச் செலுத்தப்பட்ட ரூபா 1,597,731 பெறுமதியையும் 2012 ஆம் ஆண்டின்போது வருமானத்தில் மீளச் செலுத்தப்பட்ட ரூபா 222,136 பெறுமதியையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக உரிய நிறுவனங்களிலிருந்து வரவுக் கட்டளை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- மீளாய்வாண்டின் போது வருமானத்தில் மீளச் செலுத்தப்பட்ட ரூபா 7,445,323 தொகையிலிருந்து ரூபா 7,017,283 தொகையான வருமானத்தை மீளச் செலுத்துவதற்காக உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

❖ மத்திய அரசாங்கத்தின் நிறுவனங்களுக்குரிய உத்தியோகத்தர்களின் விதவைகள், அனாதைகள் மற்றும் தபுதாரர் பங்களிப்பு பெறுவனவு தொடர்பாக தகவல்கள் எதுவும் ஓய்வூதியத் திணைக்களத்திடம் காணப்படாமையினால் வருமானத்திலிருந்து மீளச் செலுத்தும் போதும் நிலுவை வருமானத்தை கணிப்பீடு செய்யும் போதும் அவற்றின் சரியான தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.

❖ விதவைகள், அனாதைகள் அலுவலகத்தினால் மத்திய அரசாங்கத்தின் சமூகப் பாதுப்பு கணக்கிற்குரிய இரண்டாம் நிலை அடிப்படையில் விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் பங்களிப்புப் பண பெறுவனவு தொடர்பாக எவ்வித பதிவேடும் நாளது வரையாக்கப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக எந்தக் கவனமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த உத்தியோகத்தர்களின் நிலுவைப் பங்களிப்புப் பணம் உரிய நிறுவனங்களின் மூலம் பெற்றுக் கொள்வதற்கும் வருமானக் கணக்குகளில் அப்பெறுமதி நிலுவை வருமானமாக அறிக்கையிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக இணக்கக்கூற்று

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 25301 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,147,493 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களத்தின் புத்தகங்கள் மற்றும் திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் ரூபா 4,796 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் அந்த வேறுபாடு பல வருட காலமாக முன் கொண்டுவரப்படுகின்ற மீதியொன்றாக இருந்தது.

(iii) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்தக் கூட்டுத் தொகைக்கும் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிக்கும் இடையே ரூபா 272,203 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் அந்த

வேறுபாட்டில் 134,664 தொகையான மீதியொன்று நீண்ட காலமாக முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

(iv) 1990 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடமாற்றலாகிச் சென்ற பதின்மூன்று உத்தியோகத்தர்களின் நிலுவையாக இருந்த ரூபா 647,293 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) வேலை தீக்கம் செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 424,374 தொகையான கடன் மீதியை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 2.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 1.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஓய்வூதியத் திணைக்களத்தால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.2 வருடாந்த கொள்னவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் படி வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.3 உள்ளகக் கணக்காய்வு

2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் களப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட மேலதிகமாக செலுத்தப்பட்ட ஓய்வூதியம் ரூபா 131,229,776 ஆக இருந்ததுடன் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்குரியதாக அறவிட வேண்டிய மீதி ரூபா 45 மில்லியனாகும். மேலதிகக்

கொடுப்பனவை அறவீடு செய்யும் செயல்முன்னேற்றம் நலிவான நிலையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------

### வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

-----------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை 2014 மார்ச் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ஓய்வூதியத் திணைக்களத்தினால் அந்த அறிக்கை 2014 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2012 ஆம் ஆண்டிற்காகவே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்ட மிகைகள், பற்றாக்குறை மற்றும் ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்களுக்காக எரிபொருள் கொள்வனவு செய்யும் போது எரிபொருள் கட்டளைப் புத்தகத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ''பொது அறிக்கை 47'' அறிக்கைகளிலிருந்து சிபாரிசு செய்யப்பட்ட விற்பனை செய்ய வேண்டிய, அழிக்க வேண்டிய மீளமைக்கப்படக்கூடிய சகல சொத்துக்கள் தொடர்பான விபரம் பொழிப்பாக்கப்படாதிருந்ததுடன் பத்திரிகை அறிவித்தலுக்கான ரூபா 55,776 தொகை செலவில் 2013 திசெம்பர் 5 ஆந் திகதி நடாத்தப்பட்ட ஏலத்தின் போது விற்பனையாகிய பொருள்களின் பெறுமதி ரூபா 133,200 ஆகும். விற்பனை செய்யப்பட்ட

அளவினை விட பொருட்கள் பாரிய அளவில் ஏலமிடுவதற்கு உத்தேசிக்கப்பட்ட போதிலும் ஏலவிற்பனை நடவடிக்கைகள் சரியாக ஒழுங்கு படுத்தப்படாமையின் காரணமாக அத்தினம் ஏல விற்பனை பயனற்றதாக இருந்தது.

## 2.6 இணக்கமின்மைகள்

---------------------------------

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

---------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 2.6 இணக்கமின்மைகள்

---------------------------------

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

---------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள் | |
| 2008 இன் 3ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதியக் (திருத்த) அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவில் திருத்தப்பட்ட ஆசிரியர் ஓய்வூதிய கட்டளைச் சட்டத்தின் 6 ஆவது பிரிவு | - பாடசாலை ஆசிரியர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதிய நிதிக் கணக்கொன்றில் பேணப்படாதிருந்ததுடன் நிதியாண்டிற்காக நிதியம் தொடர்பான நிதிக்கூற்றுக்கள் மற்றும் கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரங்களும் நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையொன்றும் தாரிக்கப்பட்டிருக்க வில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

---------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 880 மற்றும் 881 | - ஓய்வூதியத் திணைக்களத்தின் 14 பதவி வகைகளுக்குரிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 1645(அ) | - வாகன சம்பவ குறிப்புப் புத்தகம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 1645(ஆ)(இ) மற்றும் 1646 | - நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்தப் பொழிப்பு அறிக்கை ஒவ்வொரு மாதமும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (iv) | நிதிப் பிரமாணம் 135 முதல் 139 | - வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்ட வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 18,191,684 கூட்டுத்தொகையான காசோலைக்குரிய கொடுப்பனவுகளுக்காக அதிகாரம், அங்கீகரித்தல், சான்றுறுதிப்படுத்துதல் மற்றும் கொடுப்பனவு போன்ற சந்தர்ப்பங்களின் போது பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் நிதிப் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

பொருட்கள் அல்லது சேவைகள் வழங்குதல் உரியவாறு நிறைவேற்றப்பட்டமை உறுதிப்படுத்தப்படாமல், மின் பிறப்பாக்கி இயந்திரம், சிற்றுண்டிச்சாலை மற்றும் மலசல கூட முறைமை என்பவற்றை நவீன மயமாக்க ரூபா 6,946,733 கூட்டுத்தொகையான 03 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்காக காசோலை எழுதப்பட்டிருந்தது.

(v) நிதிப் பிரமாணம் 237 - 14 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களின் மூலம் ரூபா 23,429,722 கூட்டுத் தொகையானது செலுத்தப்பட்டிருந்த போதும் அந்தக் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்துவதற்குரிய பதிவேடுகள், பட்டியல்கள், சான்றிதழ்கள் போன்றன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

7 காற்றுச்சீராக்கி இயந்திரங்களைப் பொருத்தவதற்காக ரூபா 1,899,430 தொகை 2013 திசெம்பர் 26 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. அந்தக் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு முன் உரிய இணைப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்டமைக்கு மேற்பார்வை உத்தியோகத்தரின் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் உரிய பூர்த்தி செய்தலும் சான்றிதழும் கொடுப்பனவு செய்யப்பட்டதன் பின்னரே அதாவது முறையே 2014 சனவரி 30 ஆந் திகதி மற்றும் 2014 பெப்ரவரி 03 ஆந் திகதிகளிலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(இ) பொது நிருவாகச் சுற்றறிக்கை

-------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/91 ஆம் இலக்க சுற்றறிக்கை | - திணைக்களத்திற்குச் சொந்தமான சகல வாகனங்களும் 6 மாதங்களுக்கு ஒரு தடவை எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2002 பெப்ரவரி 25 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க சுற்றறிக்கை | திணைக்களத்தின் வாகனங்களுக்காக அரசாங்க இலட்சனை மற்றும் திணைக்களத்தின் பெயர் சுற்றறிக்கையின் படி பொறிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது திணைக்களத்தின் பெயர் அங்குமிங்கும் பதாதையால் ஒட்டப்பட்டிருந்தது. |

## 2.7 செயல்திட்டத்தை அமுலாக்குவதில் நலிவுகள்

-----------------------------------------------------------------------------

செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல் மற்றும் பொருட்கள் சேவைகள் வழங்காமல் நிதியினை விடுவித்தல் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்யாது கைவிடல்

--------------------------------------------------------------------------------

அரசாங்க நிறுவனங்களை மீளமைத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2004 ஆம் ஆண்டின் போது பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு, ஓய்வூதியத் திணைக்களம் மற்றும் தகவல் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப முகவராண்மையுடன் (ICTA) சேர்த்து ஓய்வூதிய செயற்பாடுகளை மிகவும் செயற்திறனானதாகவும் வினைத்திறனானதாகவும் நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கத்தில் ஓய்வூதியத் திணைக்களத்தில் ‘‘ஈ - ஓய்வூதிய செயற்திட்டம்’’ ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதில் நிர்ணயிக்கப்பட்ட செயற்திட்டம் 2011 செப்தெம்பர் 20 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், ஓய்வூதியத் திணைக்களத்தினால் பயிற்சிக்காக செய்யப்பட்ட செலவினம் மற்றும் ஏனைய செலவினங்கள் தவிர ரூபா 174 மில்லியன்

செலவிடப்பட்டதன் பின்னர் முறைமையில் ஏற்பட்ட தொழில்நுட்ப வழுவின் காரணமாக 2013 நவம்பர் 01 ஆந் திகதி முதல் அந்த செயற்திட்டம் முழுமையாக நிறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தின் மலசல கூட முறைமையினை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்காக மேல்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு 2013 திசெம்பர் 06 ஆந் திகதி ரூபா 2,000,000 செலுத்தப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 ஆந் திகதி மேலும் ரூபா 2,000,000 தொகையான காசோலை எழுதப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட A, B மற்றும் C என்ற விடயங்களை உடைத்து அகற்றுதல், கொங்கிரீட் இடல் மற்றும் மேசன் வேலைகளுக்காக ரூபா 1,075,430 தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட செயற்பணிகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தன.

(ii) திணைக்களத்தின் மூன்றாவது மாடியை நவீன மயப்படுத்துவதற்காக 2013 திசெம்பர் 26 ஆந் திகதி கொள்வனவு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக்குப் பறம்பாக முழுமையான கொள்வனவுத் தொகையான ரூபா 2,681,430 ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. இருந்த போதிலும் பணம் செலுத்தப்பட்ட சந்தர்ப்பம் வரையிலும் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் நிறைவேற்றுதல் மிகவும் ஆரம்ப மட்டத்தில் காணப்பட்டதுடன் மூன்றாவது மாடியின் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

## 2.8 செயலாற்றல்

2013 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

திணைக்களத்தின் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) மாதாந்த ஓய்வீதியக் கொடுப்பனவு செலுத்துதல் திணைக்களத்தின் முதன்மைப் பணியாக இருந்த போதிலும் அதற்காக முறையான கட்டுப்பாட்டுத் திட்டம் தாபிக்கப்பட்டிருக்க வில்லை.

(ii) 2011 சனவரி 30 ஆந் திகதிய 01/2011 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் படி திணைக்களத்தினால் ஒன்றிணைந்த கட்டுப்பாட்டுக் கணக்கொன்று தபாரிக்கப்படாமல் மாதாந்த ஓய்வூதியத்திற்காக கோரப்பட்ட பணம் பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்தன.

(iii) பிரதேச செயலகங்களினால் கோரப்படுகின்ற மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தொடர்பாக செயற்பொறுப்பு திணைக்களத்தினால் ஒரு ஊழியருக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் உள்ளகப் பரிசோதனை ஒன்று ஏற்படும் வகையில் கடமைக் கையளிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) ஓய்வூதியத் தரவு முறைமையில், தரவுகள் உள்ளடக்கப்படாத காலப்பகுதி காணப்பட்டதுடன் அவ்வாறு ஏற்பட்டமைக்கான காரணமான விடயங்கள் மற்றும் அதற்குப் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களை இனங்காண்பதற்கு அல்லது அதற்குரிய காரணங்களைக் கண்டறிவதற்கோ தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) நிதியேற்பாடு ஒதுக்கப்பட்ட செலவின விடயங்களின் பிரகாரம் ஓய்வூதியச் செலவினம் செலவினப் பேரேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.

(vi) 2014 யூலை மாதத்திற்குரிய திணைக்களத்தில் கணக்குப் பிரிவில் ஓய்வூதியச் செலவினம் மற்றும் ஓய்வூதியத் தரவு முறைமையின் ஓய்வூதியச் செலவினம் என்பவற்றிற்கிடையே ரூபா 691,004,249 வேறுபாடு காணப்பட்ட போதிலும், அந்த வேறுபாட்டிற்குரிய காரணங்களை இனங்கண்டு உள்ளபடியான ஓய்வூதியச் செலவினங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான திட்டமுறைமையொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) திணைக்களத்தில் காணப்பட்ட ஓய்வூதியத் தகவல் முறைமை, ஈ - ஓய்வூதிய செயற்திட்டத்திற்குரியவாறு தயாரிப்பதற்காக தகவல்களை உள்ளடக்கும் போது பிழை மற்றும் போலியான தகவல்களை உள்ளடக்குவதைத் தவிர்ப்பதற்கான எவ்வித பாதுகாப்பு வேலைத்திட்டமும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) திணைக்களத்தின் ஓய்வூதியத் தரவு முறைமையில் காணப்படுகின்ற 55 நிரல்களில் சகல நிரல்களும் பூர்த்தி செய்யப்படாதிருந்த போதிலும், ஓய்வூதியத்தைக் கோருவதற்கு அல்லது செலுத்தவதற்கு அது தடையாக இல்லாதிருந்ததுடன், 2014 யூலை மாதத்தின் ஓய்வூதித் தரவு முறைமையின் படி வங்கிக் கணக்கின் இலக்கமொன்று காணப்படாத 100,915 ஓய்வூதியக் காரர்களுக்கும் தேசிய அடையாள அட்டை இலக்கம் குறிப்பிடப்படாத 148,248 ஓய்வூதியக்காரர்களுக்கும் ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்தன.

(ix) பற்றுச்சீட்டு (slip) முறைமையில் ஓய்வூதியம் செலுத்தும் போது, ஓய்வூதியக்காரரின் கணக்கிற்கு செலவு வைக்கப்படாத 2013 ஆம் ஆண்டில் ரூபா 21,143,462 தொகையான செலுத்தாத ஓய்வூதியம், ஓய்வூதிய தரவு முறைமையிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அது ஓய்வூதிய தரவு முறைமையில் செலவினமாகக் காணப்பட்டது.

(x) தபால் அலுவலகங்கள் மற்றும் வங்கிக் கிளைகளின் மூலம் ஓய்வூதியம் செலுத்தும் போது செலுத்தப்படாத ஓய்வூதியத்தை குறிப்பாக இனங்கண்டு ஓய்வூதிய தரவு முறைமையிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் செலவினமாக தொடர்ந்தும் வெளிப்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(xi) தபால் அலுவலகத்தின் ஊடாக ஓய்வூதியம் செலுத்தும் போது செலுத்தப்படாத ஓய்வூதியம் தபால் திணைக்களத்தின் மூலம் விரைவாக மீளப்பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 12,823,128 செலுத்தாத ஓய்வூதியம் தபால் அலுவலகங்களிலிருந்து தபால் திணைக்களத்திற்கு கிடைக்கவேண்டியிருந்தது.

## 2.9 வங்கிக் கணக்கு செயற்பாடுகளில் குறைபாடு

-----------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் வங்கி நடைமுறைக் கணக்கில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மற்றும் 2014 சனவரி 31 ஆந் திகதியில் உள்ளவாறான வங்கிக் கணக்கிணக்கக்கூற்றின் பரீட்சிப்பின் போது 2013 திசெம்பர் 31 ஆந் திகதயில் உள்ளவாறு ரூபா 867,799,925 பெறுமதியான 1766 காசோலைகள் மற்றும் 2014 சனவரி 31 ஆந் திகதியில் உள்ளவாறு 2013 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 48,023,442 பெறுமதியான 140 காசோலைகள் என்பன வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கொடுப்பனவாகக் காசேட்டில் பதியப்பட்டு பெறுபவர்களின் பெயரில் எழுதப்பட்ட ரூபா 18,191,684 பெறுமதியான 11 காசோலைகள் 2014 பெப்ரவரி 25 ஆந் திகதியான கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் உரிய தரப்பினருக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தது. அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஓய்வூதியத் திணைக்களத்தின் விதவைகள், அனாதைகள் பிரிவினால் சிவில் மற்றும் இராணுவ ஓய்வூதியம் பெறுவோரின் 2606 விண்ணப்பங்களுக்காக 2013 சனவரி 01 ஆந் திகதி முதல் 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையான காலத்தில் எவ்வித சட்டரீதியான ஏற்பாடுகளுமின்றி அந்த பங்களிப்புப் பணத்தில் ரூபா 133,731,886 தொகை மீளச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 2010 இன் 08 ஆம் இலக்க விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் (திருத்திய) அதிகாரச்சட்டத்திற்கும் 2010 திசெம்பர் 16 ஆந் திகதிய 13/2010 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கும் இடையே கொடுப்பனவுகள் தொடர்பாக பரஸ்பர வேறுபாடு காணப்பட்ட போதிலும் அதனை சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2013 ஒக்தோபர் மாதம் முதல் 2014 திசெம்பர் மாதம் வரை 14 சிவில் ஓய்வூதிய உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களுக்காக விதவைகள் அனாதைகள் பங்களிப்புப் பணம் மீளச் செலுத்துதல் நிறுத்தப்பட்டிருந்தது.

## 2.11 மேலதிக செலுத்துதல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஓய்வூதியம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டமையின் காரணமாக ஏற்பட்ட நட்டம் ரூபா 111,743,343 ஆக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அந்த நட்டம் ரூபா 133,229,770 வரை அதிகரித்திருந்தது.

(ஆ) ஓய்வூதியம் பெறுவோர் மரணமடைந்ததன் பின்னர் அவர்களில் தங்கிவாழும் விதவைகள் அனாதைகள் பங்களிப்புப் பணமும் ஓய்வூதியக்காரருக்கு செலுத்தப்படுகின்ற ஓய்வூதியமும் ஆகிய இரண்டும் கொடுப்பனவு செய்யப்பட்ட சந்தர்ப்பம் அவதானிக்கப்பட்டதுடன் அதன் படி ரூபா 712,278 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட விதவைகளிடமிருந்து தவணையாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் உரிய கொடுப்பனவுகளை மேற்கொண்ட உத்தியோகத்தருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.12 முகாமைத்துவ நலிவுகள்

-------------------------------------------

ஓய்வூதியத் திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவும் தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) கணக்குகள் பிரிவு

-------------------------------

திணைக்களத்தின் தலைப்பின் கீழ் யுத்தத்தின் போது மரணமடைந்த மற்றும் ஊனமுற்ற படையினருக்காக வயது 55 வருடங்கள் வரையும் சம்பளம் செலுத்துவதற்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 16,152 மில்லியன் தொகையான நிதியேற்பாடு படைப் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிதியேற்பாட்டின் பயன்படுத்தல் தொடர்பாக திணைக்களத்தின் தொடர்புபடுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) தபால் பிரிவு

--------------------

தபால் பிரிவிற்குக் கிடைக்கின்ற கடிதங்கள் சரியாக இனங்காணப்பட்டு உரிய பிரிவுகளிற்கு அனுப்பப்படாமையினால் அந்தக் கடிதங்கள் திரும்பவும் தபால் பிரிவிற்கு அனுப்பப்பட்டிருந்தது. ஒரு கடிதம் 5 இடங்களுக்கு அனுப்பப்பட்டு மீளவும் தபால் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 05 கடிதங்கள் 32 தினங்கள் முதல் 305 தினங்கள் வரையிலான காலத்திலும் குறிப்பிட்ட பிரிவிற்கு அனுப்பிவைக்க முடியாது 2013 ஒக்தோபர் மாதம் வரையிலும் தபால்

பிரிவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஆரம்ப சந்தர்ப்பத்திலேயே ஏற்படுகின்ற தாமதத்தினால் ஓய்வூதியத் திணைக்களத்தினால் எதிர்பார்க்கப்பட்ட, சேவை பெறுனர்களின் தேவையை துரிதமாக நிறைவேற்றுவதற்கு இடையூறாக இருந்தது. தபால் பிரிவின் பணிகள் ஆக்கபூர்வமானதாகவும் செயற்திறனானதாகவும் நடாத்திச் செல்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(இ) பதிவு செய்தல் கிளை**

பதிவு செய்தல் கிளைக்குக் கிடைக்கின்ற ஓய்வூதிய விண்ணப்பங்களில் 25 சதவீதம் அளவில் ஒரு நேரத்தில் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக கையொப்பமிடாமை, உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரை இடாமை, உரிய படிவங்கள் பிழையாக இருந்தமை, சேவைக் காலம் பிழையாக இருந்தமை, வங்கிக் கணக்கு இலக்கம் பிழையாக இருந்தமை போன்றன காரணங்களாக இருந்ததுடன் அந்த நிலைமை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு முறையான வேலைத்திட்டமொன்று திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) விதவைகள், அனாதைகள் அலுவலகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய அலுவலகத்தின் பிரதான கிளையில் ஒரு உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்ட நான்கு கோவைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது விதவைகள், அனாதைகள் ஓய்வூதியம் கோரி 11 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அந்த கோரல் விண்ணப்பம் சமர்ப்பித்தலின் குறைபாடு, கோவைகளின் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு அதிகமான காலம் எடுத்தமை, கோரப்பட்ட தகவல்கள் கிடைக்காமை, மீளக் கோருவதற்கிடையே அதிகளவான கால இடைவெளி காணப்பட்டமை, அறவிடல் விபரங்கள் அழிவடைந்தமை போன்றவற்றின் காரணமாக அந்த

விதவைகள், அனாதைகள் ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) விவாகமாகாத உத்தியோகத்தரின் விதவைகள், அனாதைகள் பங்களிப்புப் பணத்தை மீளப்பெற்றுக் கொள்வதற்கு அனுப்பப்பட்ட 10 பங்களிப்புப் பண விண்ணப்பங்களுக்கான கொடுப்பனவு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது முழுமையான தகவல்களுடன் கிடைத்த 8 விண்ணப்பங்களுக்காக கொடுப்பனவு செய்தல் எவ்விதக் காரணங்களும் இன்றி 1 வருடமும் 1 மாதமும் முதல் ஒரு வருடமும் 8 மாதங்கள் வரையான இடைவெளி எடுக்கப்பட்டிருந்தது.

**(உ) ஆயுதப்படைப் பிரிவில் சேவையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய பதிவு இலக்கத்தை வழங்குதல்**

-----------------------------------------------------------------------------------------------------------------------

வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் ஓய்வூதியத் திணைக்களத்தின் தலைப்பின் கீழ் ஆயுதப்படைப் பிரிவில் சேவையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதிய மற்றும் விதவைகள் நலன்கள் மற்றும் பணிக்கொடை தொகைகளுக்கான நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவர்கள் தொடர்பாக விதவைகள் அனாதைகள் பதிவு இலக்கம் வழங்குதல் ஓய்வூதியத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டிருந்தது.

**(ஊ) வருடாந்த இடமாற்றம் வழங்குதல்**

---------------------------------------------------------

2005 ஆம் ஆண்டில் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு ஓய்வூதிய உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். 09 வருடங்களுக்குப் பின்னர் அவர்களுக்கு இடமாற்றம் 2014 சனவரி மற்றும் யூலை மாதங்களில் வழங்கப்பட்டிருந்த போதிலும், மேலும் 04 வருடங்கள் முதல் 09 வருடங்கள் வரையான சேவைக் காலத்தை விஞ்சி பிரதேச செயலகங்களில் சேவையாற்றுகின்ற 64 உத்தியோகத்தர்களுக்காகவும் தலைமை அலுவலகத்தின் 42 உத்தியோகத்தர்களுக்காகவும் இடமாற்றம் வழங்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(எ) ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளத்தில் அறவிடப்படுகின்ற 6 சதவீத பங்களிப்பு**

---

1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய அதிகாரச்சட்டம் மற்றும் 1979 இன் 64 ஆம் இலக்க பிரிவெனாக் கல்வி அதிகாரச்சட்டத்தின் கீழ் ஓய்வூதிய உரித்தைப் பெறுகின்ற ஆசிரிய/ ஆசிரியர்கள் தமது அடிப்படைச் சம்பளத்தில் 6 வீத பங்களிப்புப் பணம் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டு உரிய பிரிவெனாக்கள் மற்றும் பாடசாலைக்குரிய வலயக்கல்வி அலுவலகத்தினால் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும். திணைக்களத்தினால் அந்தப் பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் பெற்றுக்கொள்வதற்கு அல்லது அறிக்கை பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் பன்முகப்படுத்தப்படாத இந்த ஆசிரியர்கள் ஓய்வுபெற்றுச் செல்லும் சந்தர்ப்பத்தின் போது ஓய்வூதியப் பங்களிப்பு நிதியத்தை சம்பளத்திலிருந்து கழித்தல், தொடர்பான பிரிவெனாக்கள் மற்றும் பாடசாலைக்குரிய வலயக்கல்வி அலுவலகங்களில் தகவல்களைப் பெற்று அந்தத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதிய உரித்து தீர்மானிக்கப்பட்டிருந்தது.

**(ஏ) பிரதேச செயலகங்களில் பரிசோதனை**

---

பிரதேச செயலகங்களில் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) கடுவெல பிரதேச சபை

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

* தொடர்ச்சியாக 03 மாதங்கள் ஓய்வூதியம் பெறப்படாத போது ஓய்வூதியம் செலுத்துதல் நிறுத்தப்பட வேண்டிய போதிலும் ஓய்வூதியம் வழங்கப்படாத ஓய்வூதியக்காரர்களுக்கு 4 வருட காலம் தொடர்ச்சியாக ஓய்வூதியம் தபால் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

* தபால் அலுவலகங்களால் செலுத்தப்படாததாகக் காண்பிக்கப்பட்டு மீள அனுப்பப்பட்ட ஓய்வூதியம் பிரதேச செயலகங்களினால் முறையான பிரகாரம் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டு தபால் அலுவலகங்களையும் ஓய்வூதியக்காரர்களையும் இனங் காணக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டு ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

* ஓய்வூதியம் மற்றும் விதவைகள் ஓய்வூதியம் ஒரு உத்தியோகத்தருக்கு கிடைக்கின்ற சந்தர்ப்பத்தின் போது அந்த ஓய்வூதியக்காரர் மரணம் அடைகின்ற போது இரண்டு ஓய்வூதியங்களும் நிறுத்தக் கூடிய வகையில் கோவைகளுக்கிடையே தொடர்பு ஏற்படுத்தப்பட்டிருக்க வில்லை.

* 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் மரணித்த ஓய்வூதியக்காரர்களின் இறப்புச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரும் ஓய்வூதியம் கைவிடப்படாமல் ஓய்வூதியம் பெறுவோரின் கணக்குகளில் செலவு வைக்கப்பட்ட ரூபா 2,489,200 தொகை ஆக இருந்ததுடன் வங்கியூடாக ATM வசதிகள் மூலம் அந்தப் பணம் ஓய்வூதிய உரித்தாளியின் தங்கியிருப்போரினால் பெறப்பட்டிருந்தது. அவ்வாறு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகையில் 2014 யூன் மாதம் வரையிலும் ரூபா 297,945 தொகை மீள அறவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தொழுவ பிரதேச செயலகம்

------------------------------------------------

ஓய்வூதிய கோவையில் காணப்பட வேண்டிய அறிக்கை குறிப்புக்கள், வருடாந்தம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஓய்வூதிய சான்றிதழ், தயாரிக்கப்பட்ட, பரீட்சிக்கப்பட்ட, அங்கீகாரத்துடன் கூடிய சம்பளத் திருத்த விபரங்கள், வங்கிக் கணக்கு இலக்க

மாற்றுதல் விபரங்கள் போன்ற சட்டரீதியான ஆவணங்கள் காணப்படாத போதும் 5 ஓய்வூதியம் பெறுவோர் தொடர்பாக கோவைகள் காணப்படாத போதும் ஓய்வூதியம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 3 கூட்டு வங்கிக் கணக்குகளுக்காகவும் ஆலோசனை பெறப்படாமல் சம்பளம் செலவு வைக்கப்பட்டிருந்தது.

**(ஐ) ஓய்வூதியம் செலுத்துதல் வங்கி முறைமையின் ஊடாக அமுல்படுத்தல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டுத் திட்டம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஓய்வூதியத் திணைக்களத்தினால் ஓய்வூதியக் கொடுப்பனவிற்காக பணத்தை விடுவிக்கும் வகையில் ஓய்வூதியத் தரவு முறைமையொன்றை தாபிக்கும் போது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை தாபிக்காமல் மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தது.

(ii) வங்கி முறைமையின் ஊடாக ஓய்வூதியக் கொடுப்பனவு முறைமையைத் தாபிக்கும் போது காணப்பட்ட நலிவான கட்டுப்பாடு மற்றும் கீழே குறிப்பிடப்பட்ட முறையற்ற நிலைமைகளும் ஓய்வூதிய மோசடிகள் ஏற்படுவதற்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

* திணைக்களத்தினால் அவ்வப்போது ஓய்வூதிய இலக்கம் வழங்கும் முறைமை மத்தியமயப்படுத்தப்பட்ட மற்றும் பன்முகப்படுத்துதலின் ஊடாக ஓய்வூதிய இலக்கத்தை வழங்குதலில் ஒன்றித்த முறைமையொன்று காணப்படாமையின் காரணமாக ஒரே ஓய்வூதிய இலக்கம் ஓய்வூம பெறும் பலருக்கு வழங்கப்பட்டிருந்தன.

* ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பாக பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்டச் செயலகங்களில் பதவிநிலைத் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கு நிதிப்பிரமாணம் 145(2)(3) இன் ஏற்பாடுகளின் படி

முறையான வகையில் பணிப்பொறுப்புக் கையளித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

* சகல விதவைகள், அனாதைகள் ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்கல் பத்திரம் விநியோகித்தல் ஓய்வூதியத் திணைக்கத்தின் கட்டுப்பாடின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

* உத்தியோகத்தரொருவர் ஓய்வுபெற்றுச் செல்லும் சந்தர்ப்பத்தில் காணப்படுகின்ற விதவைகள், அனாதைகள் கோவைகளை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக விதவைகள், அனாதைகள் கொடுப்பனவுகளில் தாமதம் காணப்பட்டமை மற்றும் அதன்படி நிலுவை விதவைகள், அனாதைகள் கொடுப்பனவுகளின் அளவு உயர்வடைந்தமை.

* ஓய்வூதிய உத்தியோகத்தர்கள் மற்றும் அது தொடர்பான பணிகளில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்கள் இடமாற்றப்பட்டு, இடமாற்றக் கொள்கை கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

* பிரதேச செயலகங்களுக்கு நியமிக்கப்பட்ட ஓய்வூதிய உத்தியோகத்தர்களுக்கு வேலை கையளிக்கும் போது உள்ளகப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படும் வகையில் கையளிக்கப்படாமை மற்றும் வரையறையற்ற அதிகாரக் கையளித்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. (வழங்கல் பத்திரம் கையொப்பமிடல், தரவுகளை உள்ளடக்குதல் போன்ற)

* இனங்காணப்பட்ட மேலதிக கொடுப்பனவுகள் மற்றும் ஓய்வூதிய மோசடிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் மற்றும் தாபன விதிக்கோவையின் படி முறையான பரிசோதனை மேற்கொண்டு அந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தல் ஆரம்பம் முதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

* வங்கியினால் ஓய்வூதிய இலக்கம், ஓய்வூதியக்காரர்களின் பெயர் போன்ற தகவல்களுக்குப் புறம்பாக வங்கிக் கணக்கு இலக்கத்தின் அடிப்படையில் மாத்திரம் ஓய்வூதியத்தை வங்கியிலிடல் தொடர்பாக வங்கியுடன் இணக்கப்பாடொன்றுக்கு வந்திருக்கவில்லை.

(iii) பின்வரும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் உரிய பிரகாரம் அமுல்படுத்தப்படாமையினால் ஓய்வூதிய மோசடிகள் ஏற்படுவதற்கு தாக்கமளித்திருந்தது.

* உயிர்வாழ்வுச் சான்றிதழ் சமர்ப்பிக்காதிருத்தல், ஓய்வூதியம் செலுத்துதல், இறப்புச் சான்றிதழ் சமர்ப்பித்தல், ஓய்வூதியத்தை நிறுத்தாமை மற்றும் அந்தச் சான்றிதழ்கள் உரிய வேளையில் சமர்ப்பிப்பதற்கு கிராம உத்தியோகத்தரும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

* சுழற்சியிலுள்ள ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கைக்கும் ஓய்வூதியக் கோவைகளின் எண்ணிக்கைக்குமிடையே இணக்கப்பாடு காணப்படாமை மற்றும் ஓய்வூதியக் கோவையில் காணப்பட வேண்டிய அத்தியவசிய ஆவணங்கள் ஓய்வூதியக் கோவையில் காணப்படவில்லை.

* ஓய்வூதியம் பெறுகின்ற உத்தியோகத்தர்களின் ஓய்வூதியம் தொடர்பான கணிப்பீடுகளின் போது ஒரே காரணம் தொடர்பிலான கணிப்பீடு பல்வேறு முறையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iv) ஓய்வூதியக் கொடுப்பனவு நடைமுறைகளுக்காக ஒட்டுமொத்த அரசாங்க இணைய தளமும் தொடர்புபடுகின்ற போதிலும் ஓய்வூதியத் திணைக்களம் தமது செயற்பொறுப்பை உரிய பிரகாரம் நிறைவேற்றுவதற்காக ஏனைய அரசாங்க நிறுவனங்களின் பங்களிப்பை போதியளவான பிரகாரம் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

## 2.13 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 22 | 22 | - | - |
| (ii) | மூன்றாம் நிலை | 11 | 03 | 08 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,076 | 840 | 236 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 75 | 64 | 11 | - |
| (v) | அமைய | - | 01 | - | 01 |
| | மொத்தம் | 1,184 | 930 | 255 | 01 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியளவில் 255 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### (ஆ) ஏனைய தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மனித வளங்கள்

திணைக்களத்தினால் ஏனைய தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மனித வளங்கள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கபடுகின்றது.

| ஊழியர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | காலப்பகுதி |
|---|---|---|---|
| பெண் பொலிஸ் உத்தியோகத்தர் | 1 | பொலிஸ் திணைக்களம் | 2010 யூன் 08 ஆந் திகதி முதல் |
| பெண் பொலிஸ் கொஸ்தாபல் | 1 | பொலிஸ் திணைக்களம் | 2012 பெப்ரவரி 24 ஆந் திகதி முதல் |

**3. தலைப்பு 254 - பதிவாளர் நாயகம் திணைக்களம்**

**3.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய கூற்றுக்கள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 10 ஆம் திகதி திணைக்களத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், காண்புகள், கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளின் போதியளவு செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும், நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப்பெற்ற பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமானளவு விரிவானதொரு கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது.

## 3.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 ஆம் 152 ஆம் ஏற்பாடுகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்கும் வகையில் பேணப்படுதல், தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பித்தல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது பிழைகளின் நிமித்தம் ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்களைத் கொண்டிராத கணக்குகளையும் இணக்கக்கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் அவற்றை நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடல் அமுலாக்குதல் மற்றும் பேணுதல் இப் பொறுப்புக்களில் உள்ளடக்கபொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பிரயோகித்தல், சந்தர்ப்பத்துக்கேற்றவாறு நியாயபூர்வமாக கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரித்தல் என்பனவும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 3.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, இதன் (அ) முதல் (உ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகளைத் தவிர்த்து, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்பட்டிராமை

திணைக்களத்தால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிராமை தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் |
| --- | --- |
| • பொறுப்புகள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 |
| • விதி மீறல் அறிக்கை பதிவேடு | பதிவாளர் நாயகத்தின் கைநூல் 375 ஆம் பிரிவு |

**(ஆ) பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒரு செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,000,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 16 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டின் 7 சதவீதத்திலிருந்து 73 சதவீதம் வரையான வீச்சளவைக் கொண்டிருந்தது.

(iii) மதிப்பிடப்பட்ட நிதிஏற்பாட்டில் நிதிப் பிரமாணம் 66 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் வேறு செலவின விடயங்களுக்கு ஏற்பாடு மாற்றப்பட்டதை அடுத்தும் 30 சதவீதத்திற்கு மேலான ஏற்பாட்டுச் சேமிப்புகள் நிலவிய 2 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(iv) ஆரம்ப மதிப்பீட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாட்டிற்கு மேலதிகமாக நிதிப் பிரமாணம் 66 இன் ஏற்பாடுகளின் படி ரூபா 10,000,000 தொகையான மிகையான ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 254-01-02-2001 கட்டிடம் மற்றும் நிர்மாணிப்புகள் செலவின விடயங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 4,484,710 தொகையான ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**(இ) கட்டுநிதிக் கணக்குகள்**

**-----------------------------------**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம் பணி முடிவுற்ற உடன் பெற்றுக்கொள்ளப்பட்ட செயல் நிமித்த உபகட்டு நிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் பணி முடிவுற்று 1 மாத கால தாமதத்தின் பின்னரும் உபகட்டுநிதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

ii 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் காசேட்டின் தீர்ப்பனவு தொடர்பாக 2013 நவம்பர் 18 ஆம் திகதிய 06/2013 ஆம் இலக்க திறைசேரிச் செயற்பாட்டுச் சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்களத் தலைவரால் நியமிக்கப்பட்ட அதிகாரப்பொறுப்புடைய உத்தியோகத்தரால் 2013 திசெம்பர் 31 இன் பின்னர் காசேட்டில் எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் பதிவுசெய்யப்பட முடியாத வகையில் குறிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) வருமானக் கணக்குகள்**

**--------------------------------------**

(i) குறியீட்டு இல. 10:03:02:00 (ஒப்படை வரி)

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

* 2013 ஆம் ஆண்டின் அடிப்படை வருமான மதிப்பீடு ரூபா 112 மில்லியன் தொகையானதுடன் திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு ரூபா 1.6 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கும் தேறிய வருமான சேகரிப்பிற்கும் இடையிலான வேறுபாடு ரூபா 1133.6 மில்லியன் தொகையானமையால் முறையான வகையில் மதிப்பிடப்படாது வருமான மதிப்பீடு திருத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

* 2004 நவம்பர் 25 ஆம் திகதிய பதிவாளர் நாயகத்தின் அறிவுறுத்தற் கடிதத்தின் படி, இந்நாட்டின் சொத்தொன்று வெளிநாட்டவர்களுக்கு ஒப்படைக்கப்படுகையில், உறுதியில் குறிப்பிடப்பட்ட சொத்தின் பெறுமதி குறித்த பெறுமதியைப்

பார்க்கிலும் குறைவாகப் பதியப்பட்டுள்ளதாக உரிய காணிப் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தின் பதிவாளருக்கு மிகத் தெளிவாக சந்தேகம் ஏற்பட்டவேளையில் அச் சொத்தின் பெறுமதி தொடர்பாக பிரதான மதிப்பீட்டாளர் ஒருவரின் ஓர் அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் படி, பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பிரதான மதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கை பெறப்படுகையில் தற்போதைய நடைமுறையில் அவ்வாறு செயற்படுவதில் சிக்கல் நிலவுவதாக கணக்காய்விற்கு இது குறித்து பதிவாளர் நாயகம் குறிப்பிட்டிருந்தார்.

* வெளிநாட்டவர்களுக்கு காணிகளை ஒப்படைக்கையில் வருமானத்தைச் சேகரிப்பதற்காக வேறான பதிவேடுகள் பேணப்படுவதற்கு சட்டத்தில் ஏற்பாடுகள் காணப்பட்ட போதிலும் உறுதியைப் பதிவு செய்வதைத் தவிர வெளிநாட்டவர்களால் பொறுப்பேற்கப்பட்ட மொத்த காணியின் அளவு எவ்வளவு என்பது குறித்து உறுதிப்படுத்திக்கொள்வதற்குரிய தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படக்கூடிய வகையில் ஓர் பதிவேடு பேணப்படுவதற்கு பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வருமானக் குறியீடு – 10:03:08:00 நொத்தாரிசிற்கு வருடாந்த உயர் நீதிமன்றச் சான்றிதழ்கள் வழங்கப்படும் கட்டணம்

---

2013 செப்தெம்பர் 03 ஆம் திகதிய FP/06/100/05/01(III) ஆம் இலக்க நிதி திட்டமிடல் அமைச்சுச் சுற்றறிக்கையின் பிரகாரம் நொத்தாரிஸ்களுக்கு வருடாந்த உயர் நீதிமன்றச் சான்றிதழ் வழங்கப்படும் கட்டணக் குறியீட்டு இல. 10:03:08:00 வருமானக் குறியீட்டின் கீழ் பதிவாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் வெற்று வருமான அறிக்கையொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(iii) வருமானக் குறியீடு – 10:03:07:02 (பதிவுக் கட்டணம்)

------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- வருடாந்த வருமான மதிப்பீடு ரூபா 808 மில்லியன் தொகையான போதிலும் வருமானக் கணக்கில் இது ரூபா 178 மில்லியன் தொகையாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு ரூபா 1,225 மில்லியன் தொகையானதுடன் இது வருமானக் கணக்கில் ரூபா 1,025 மில்லியன் தொகையாக ரூபா 200 மில்லியன் தொகையால் தவறாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

- நிதிப் பிரமாணம் 128(2) (இ) இன் பிரகாரம் ஒவ்வொரு 6 மாதங்களுக்கு ஒரு முறை நிலுவை வருமானம் தொடர்பான நிலையைக் காண்பிக்கும் அரையாண்டறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,137,366 கூட்டுத்தொகையான வருமானம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் அந் நிலுவையான வருமானம் தொடர்பான காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அந் நிலுவை வருமானத்தை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன. நிலுவை வருமானம் அறவிடப்படுவது தொடர்பாக பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

  - 3 பிராந்தியக் காணிப் பதிவாளர் அலுவலகங்கள் தொடர்பான உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரகாரம் பதிவுக் கட்டணங்களுக்கு உரித்தான ரூபா 861,264 தொகையான பதிவுக் கட்டண நிலுவை வருமானம், வருமானக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

  - நிதிப் பிரமாணம் 128(1) (ஆ) இன் பிரகாரம் அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெற வேண்டிய கட்டணம் தாமதமின்றியும்

முழுமையாகவும் சேகரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

- நிலுவைக் கட்டணத்தை அறவிடுவது தொடர்பாக அச் செயற்பாடு ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிதிப் பிரமாணம் 128(1)(ஏ) மற்றும் 128(2)(உ) ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- பதிவுக் கட்டண வருமானம் தொடர்பாக, முறையான வகையில் அறிக்கையிடப்பட்டிராமையும், அறிக்கையிடப்பட்ட தகவல்கள் முறையான வகையில் பதிவேடுகளில் பதியப்பட்டிராமை தொடர்பான சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

  - 2012 திசெம்பர் 31 ஆம் திகதிய 9/2012 ஆம் இலக்க பதிவாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் விவாக, பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களின் பிரதிகள் வழங்குதல், பிரசுரப்பத்திரம் மற்றும் மொழிபெயர்ப்பிற்கான அறவீடுகள் தொடர்பாகவும் விவாகப் பதிவுகளிற்காகவும் அறவிடப்படும் கட்டணம் தொடர்பான வகைப்படுத்தல் பொழிப்பறிக்கை ஒன்று மாதாந்தம் தயாரிக்கப்பட்டு அடுத்துவரும் மாதத்தின் 05 ஆம் திகதிக்கு முன்னர் திணைக்களத்தின் தலைமைக் கணக்காளருக்கு தொடர்புபடுத்தப்பட வேண்டிய போதிலும் 2013 சனவரி – யூன் வரையான காலப்பகுதிக்காக 9 மாகாணங்களுக்குரிய 98 பிரதேசச் செயலகங்கள் இதன் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

  - மேற்குறித்த சுற்றறிக்கையின் படி, காணிப் பதிவாளர் அலுவலகத்தாலும் வலய அலுவலகத்தாலும் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட பதிவுக் கட்டணம் வங்கிச் சீட்டுக்கள் (slip) காணிப் பதிவாளர் அலுவலகத்தின் படியும் வலய அலுவலகத்தின் படியும் 2013 யூன் மாதத்தின் பின்னர் முறைப்படி வகைப்படுத்தப்பட்டு கோவையிடப்பட்டிருக்கவில்லை.

**(உ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 25401 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம், அத்தினத்தில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,005,820 ஆனதுடன் அந் நிலுவை மீதி அறவிடப்படுவதற்கு நிறுவகம் தவறியிருந்தது.

(ii) இடமாற்றம் பெற்றுச்சென்ற, ஓய்வுபெற்ற, மரணித்த, கடமையிலிருந்து விலக்கப்பட்ட, கடமையிலிருந்து கேட்டு விலகிய, கடமையை விட்டுச் சென்ற 198 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,772,281 தொகையான கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

---

**3.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

---

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 சனவரி 30 ஆம் திகதியே தயாரிக்கப்பட்டிருந்தது.

**3.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தல்**

---

திணைக்கள ரீதியாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.5 சொத்து முகாமைத்துவம்**

---

(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படல்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2010 திசெம்பர் 17 ஆம் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் படி 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2014 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தில் 18 வாகனங்கள் காணப்பட்ட போதிலும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் அசைவறிக்கையில் 08 வாகனங்கள் மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்தன.

(இ) தீர்க்கப்படாத பொறுப்புகள்

------------------------------------------

திணைக்களத்தால் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி தீர்க்கப்படாத பொறுப்பு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 38,535,069 தொகையானதுடன் இம் மீதி ஒரு வருடத்திற்கும் குறைவான காலத்திற்கு உரித்தானவையாகக் காணப்பட்டன.
பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. மேற்குறித்த மீதிகள் தீர்க்கப்படும் நிலை திருப்தியற்றதாகக் காணப்பட்டன.

ii. நிதிப் பிரமாணம் 94(1) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ஏற்கப்படும் பொறுப்புகளும் செலவின அளவும் எந்த வேளையிலும் நிதியாண்டிற்கான ஏற்பாட்டுத்தொகையை மிகைத்தலாகாத போதிலும் மீளாய்வாண்டில் 4 செலவின விடயங்களின் சேமிப்பை மிகைத்து ரூபா 3,393,295 தொகையான பொறுப்புகள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

iii. நிழற்படப் பிரதி சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 15,808,163 தொகையான பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் குறித்த வகையில் நிழற்படப் பிரதி சேவைக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படாது அடுத்துவரும் ஆண்டின் ஏற்பாட்டில் பொறுப்புகளுக்கான கொடுப்பனவு

தொடர்ந்து மேற்கொள்ளப்படுவது நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் மீறலாகும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 3.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கியிராத சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (I) நியதிச்சட்ட ஏற்பாடுகள் | | |
| நொத்தாரிஸ் கட்டளைச் சட்டத்தின் 31(26) ஆம் பிரிவு | - | ஒவ்வொரு நொத்தாரிசும் தான் சாட்சியிட்ட சகல உறுதியினதும் இரண்டாம் பிரதியை அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்க வேண்டிய போதிலும் அவ்வாறு குறித்த நேரத்தில் ஒப்படைத்திராத நொத்தாரிஸ்களும் வெற்று அறிக்கையொன்றையேனும் வழங்கியிராத பல நொத்தாரிசுகளும் காணப்பட்டனர். |
| (II) வேறு சுற்றறிக்கை | | |
| நொத்தாரிஸ் கைநூல் 375(9) | 260,190 | கட்டுப் பணத்தொகையைச் செலுத்தியிராத நொத்தாரிஸ் களிடமிருந்தும் அத் தொகையை அறவிடுவதற்கோ வழக்குத் |

| | | |
|---|---|---|
| | | தொடர்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (III) இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பிரமாணம்<br>------------------------------------ | 77,850 | |
| i. நிதிப் பிரமாணம் 188(2) | | (i) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2014 மார்ச் 26 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றிலும் காசேடு வரவு வைக்கப்படாத வங்கி செலவு வைப்பாக ரூபா 77,850 காணப்பட்டது. |
| | | (ii) 2013 திசெம்பர் 30 ஆம் திகதிக்கு உரித்தாக 2014 மார்ச் 26 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக்கூற்றின் தவறின் காரணமாக காசேட்டிற்கு இரு முறை பதிவு செய்யப்பட்டதாக ரூபா 29,891,284 தொகை 2014 மே மாதம் வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. நிதிப் பிரமாணம் 396(ஈ) | | வழங்கப்பட்டு எனினும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப் பட்டிராத 6 மாதங்கள் கடந்த ரூபா 283,072 தொகையான காசோலைகள் தொடர்பாக ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.7 செயலாற்றல்

2013 வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் படி பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) முக்கிய செயற்பாடுகளுக்கு முரணான செயற்பாடுகள்

திணைக்களம் தனது நோக்கங்களுக்குரிய செயற்பாடுகளிற்கு மாறாக செயற்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

(i) திணைக்களத்தின் செயற்பணியில் பதிவேடுகளைப் பாதுகாப்பது ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கிய செயற்பாடான போதிலும் நிழற்பட பிரதி சேவை தனியார் பிரிவிற்கு கையளிக்கப்பட்டிருந்தமையால் காணிப்பதிவாளர் அலுவலகத்திற்காக உள்நுளைவதற்குத் தனியார் பிரிவிற்கு இடமளிக்கப்பட்டமையால் நோக்கத்திலிருந்து விலகியமை சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன் இதற்காக உடன்படிக்கைப் பிரிவுகளின் மூலம் பாதுகாப்பேனும் பெற்றுக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) காணிப் பதிவாளர் அலுவலகத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்த உறுதிகளின் இரண்டாம் பிரதிகள், ஒப்படைப் பத்திரம், குத்தகை உறுதி உடன்படிக்கைகள் ஆகியவை குறித்த நொத்தாரிஸின் பெயரில் தொகுதியாக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டிய போதிலும் 2005 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை தற்காலிகமான கோவைகளும் காணப்படுகின்றமையும் 2011 ஆம் ஆண்டு முதல் உறுதிகள் வகைப்படுத்தப்பட்டு தொகுதியாக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.8 வங்கிக் கணக்குகள் பேணப்படுவதிலான குறைபாடுகள்

### (அ) வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிப்பதிலான நீண்ட தாமதம்

01 வங்கிக் கணக்கொன்றிற்கு உரிய வங்கிக் கணக்கிணக்கக்கூற்று தயாரிப்பதில் நீண்ட காலதாமதம் காணக்கூடியதாக இருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| வங்கிக் கணக்கு | 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் தயாரிக்கப்பட்டிராத வங்கிக் கணக்கிணக்கக்கூற்றிற்குரிய ஆண்டு மற்றும் மாதம் |
|---|---|
| கணக்கு இல.(1) | 2013 யூலை மாதம் முதல் 2013 நவம்பர் மாதம் வரை |

### (ஆ) சீராக்கப்பட வேண்டிய மீதி

பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உத்தியோகபூர்வ வங்கிக் கணக்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த சீராக்கங்கள் தொடர்பான விபரத்தின் படி கண்டறியப்பட்ட தகவல்கள் பின்வருமாறாகும்.

| | சீராக்கங்கள் தொடர்பான விபரம் | காலப்பகுப்பாய்வு<br>06 மாதங்களுக்கு மேல் 01 வருடத்திற்குக் குறைவு<br>ரூபா |
|---|---|---|
| (i) | வழங்கப்பட்டு எனினும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராத காசோலைகள் | 283,072 |
| (ii) | இனங்காணப்படாத செலவு | 77,850 |
| (ii) | தவறுதலாக இரு தடவைகள் காசேட்டிற்கு கூட்டப்படல் | 29,891,284 |

## 3.9 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

திணைக்களத்தால் ஏற்படுத்தப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற விதத்தில் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அத்தகைய சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறாகக் காண்பிக்கப்பட்டுள்ளன.

### (அ) கொள்வனவு வழிகாட்டல் கோவையிலிருந்து விலகல்

நிழற்படப் பிரதி சேவை தனியார் பிரிவிற்கு வழங்கப்படுவதற்கான கூறுவிலைகள் கோரப்படுகையில் பின்வருமாறு கொள்வனவு வழிகாட்டல் கோவை நடைமுறைகளின் விலகல்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டல் கோவையில் 5.3.2 ஆம் பிரிவின் படியான விலைமனுக்கோரலில் வெற்றிபெற்ற விலைமனுதாரருக்கு இருக்க வேண்டிய நேரடியாக தகுதிவாய்ந்ததென உறுதிப்படுத்தப்படும் மனுதாரருக்கு தேவையான உரித்தான மற்றும் உரிய அடிப்படைத் தகவல்கள் அடங்க வேண்டிய போதிலும் மின்சக்தி வழங்கல் மற்றும் மீளச் செலுத்தப்படும் வைப்புகள் போன்ற அடிப்படை விடயங்கள் கொள்வனவு அறிவித்தலில் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் வழங்கலில் 4.4.1 ஆம் 4.4.2 ஆம் பிரிவின் படி பாரிய மற்றும் சிறிய ஒப்பந்தக்காரர்களுக்கு கலந்துகொள்ளக் கூடிய வகையில் பாரிய ஒப்பந்தம் சிறிய பகுதிகளுக்கு பகிரப்பட்டு பகுதி மற்றும் தொகுதித் தொகுப்பு முறையின் கீழ் கொள்வனவு செய்யப்படக்கூடிய போதிலும், நாடெங்கிலும் 36 காணி அலுவலகங்களுக்காக ஒரு வழங்குனரிடமிருந்து இச் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பிராந்திய ரீதியாக நிறுவகத்திற்கோ அல்லது சில நிறுவகங்களுக்கு மனு சமர்ப்பிக்கப்படுவதற்கு இயலுமானவகையில் நிபந்தனைகளின் மூலம் இடமளிக்கப்பட்டு போட்டி ஏற்படக்கூடிய விலைகள் கோரப்பட்டு திணைக்களத்திற்கு நிதிச் சலுகை ஏற்படக்கூடிய வகையில் செயற்பட்டிருக்கவில்லை.

## 3.10 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(i) பதிவாளர் நாயக அலுவலகத்தின் முத்திரை வருமான அறிக்கைகளின் படி, சகல பிரதேச செயலாளர் அலுவலகங்களிலும் பதிவாளர் நாயகப் பிரிவுகள் ஆரம்பிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் வட மாகாணத்தில் 03 மாவட்டங்களிலுள்ள 04 அலுவலகங்களில் ஸ்தாபிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தெல்கந்த காணிப் பதிவாளர் அலுவலகத்திற்குரித்தாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது நொத்தாரிஸ்களால் காணி உரித்துக் கையளிப்பு உறுதிகளில் இரண்டாம் பிரதி காணிப் பதிவாளர் அலுவலகத்திற்கு ஒப்படைப்பதிலான தாமதத்திற்குரித்தான விதி மீறல்களுக்கு உட்பட்டவை சரியாக அறிக்கையிடப்பட்டு சரியான காலப்பகுதியில் விதி மீறல் அறிவிக்கப்பட்டு இதன் படி தண்டப்பணம் கணிப்பிடப்பட்டு அறவிடப்படுவதற்கோ அல்லது வேறு தண்டனை நடவடிக்கைகளை எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(iii) நொத்தாரிஸ்கள் உறுதியின் இரண்டாம் பிரதிகளையும் வெற்று அறிக்கைகளையும் முறையான வகையில் காணிப் பதிவாளர் அலுவலகத்திற்கு ஒப்படைப்பது தொடர்பாக நிலவும் கட்டுப்பாட்டு முறையை நடைமுறைப்படுத்துவதற்கும் நொத்தாரிஸ்களால் உறுதியின் இரண்டாம் பிரதிகளும் முத்திரைக் கட்டணங்களும் குறித்த தினத்தில் ஒப்படைக்கப்பட்டிராத காரணத்தால் நேரும் அரசாங்க வருமானம் குறித்த தினத்தில் கிடைக்கப்பெறாது போகும் நிலைக்கு தாக்கமேற்படுத்தியுள்ள நலிவான கட்டுப்பாட்டு முறையை முறைப்படி செயற்படுத்துவதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 1.11 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 43 | 10 | 33 |
| (ii) | மூன்றாம் நிலை | 47 | 45 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 2108 | 1609 | 499 |
| (iv) | ஆரம்ப நிலை | 464 | 387 | 77 |
| | மொத்தம் | 2662 | 2051 | 611 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் 611 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) முறையற்ற விதத்தில் வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனிதவளங்கள்**

---

திணைக்களத்தால் வேறு தரப்பினருக்கு முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்டிருந்த மனிதவளங்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| ஊழியர் வகை | எண்ணிக்கை | வேறு தரப்பினர் | விடுவிக்கப்பட்டிருந்த காலப்பகுதி |
|---|---|---|---|
| ------------------------ | ------------------------ | ----------------------- | ---------------------------- |
| மேலதிக மாவட்டப் பதிவாளர் | 01 | சனாதிபதி செயலகம் | 2010 பெப்ரவரி 16 ஆம் திகதி முதல் இது வரை |
| மேலதிக மாவட்டப் பதிவாளர் | 01 | பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு | 2010 திசெம்பர் 31 ஆம் திகதி முதல் இது வரை |